# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## சிறுகோரிக்கை நீதிமன்றங்களின் நடவடிக்கைமுறை

**சிறுகோரிக்கை நீதிமன்றங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைக்காக ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் 2022, ஓகத்து மாதம் 31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2022, ஓகத்து மாதம் 10 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ *143 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 45.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ச.வ.- ஓ. 44/2021*

# *சிறுகோரிக்கை நீதிமன்றங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைக்காக ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்**

***1***. (1) இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சிறுகோரிக்கை நீதிமன்றங்களின் நடவடிக்கைமுறைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

## பாகம் I

## வழக்குகள்

**வழக்குகளைத் தொடுத்தல்**

***2***. இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் அத்துடன் நீதித்துறைச் சட்டத்தின் அத்தியாயம் Vஅ இன் ஏற்பாடுகளுக்கும், மற்றும் எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் விதிக்கப்பட்ட எவையேனும் பணவகையான அல்லது வேறு வரையறைகளுக்கும் அமைய, ஒரு சிறுகோரிக்கைக்கான வழக்கொன்று, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் அத்தியாயம் III இனது ஏற்பாடுகளுக்கிணங்க நீதிமுறைப் பிரிவின் இடப்பிரதேச எல்லைகளினுள்ளான சிறுகோரிக்கை நீதிமன்றத்தில் தொடுக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், வழக்குக் காரணத்தின் பெறுமதி நீதித்துறைச் சட்டத்தின் 29அ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி குறித்துரைக்கப்பட்ட பணத்தொகைக்கு அல்லது

காலத்துக்குக்காலம் அமைச்சரினால் நிர்ணயிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு தொகைக்குக் குறைவாக இருப்பினுங்கூட, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் அத்தியாயம் LIII இன் அல்லது பண அறவீட்டுக்கான கருமங்களைக் கேட்பதற்கு விசேட ஏற்பாடுகளைக்கொண்ட வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கோப்பிடப்பட்ட ஏதேனும் வழக்கைக் கேட்டுத் தீர்மானிப்பதற்குச் சிறுகோரிக்கை நீதிமன்றமொன்று நியாயாதிக்கங்கொண்டிருத்தலாகாது.

ஒரு சிறுகோரிக்கை நீதி மன்றத்திலான வழக்குக் காரணம்

**3**. ஒரு சிறுகோரிக்கை நீதிமன்றத்திலான வழக்குக் காரணம், நீதித்துறைச் சட்டத்தின் 29அ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி குறித்துரைக்கப்பட்ட பணத்தொகைக்காக அல்லது காலத்துக்குக்காலம் அமைச்சரினால் நிர்ணயிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வேறு பணத்தொகைக்காக நீதித்துறைச் சட்டத்தின் அத்தியாயம் Vஅ இன் ஏற்பாடுகளுக்கு வரையறுக் கப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், வழக்காளி, ஒவ்வொரு வழக்குக் காரணத்தினதும் பெறுமதி அத்தகைய பணத்தொகையை விஞ்சாதவிடத்து, அதே திறத்தவர்களுக்கிடையே அதே செயல் அல்லது கொடுக்கல்வாங்கலிலிருந்து எழுகின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வழக்குக் காரணங்களை இணைக்கலாம்.

உரிமைக் கோரிக்கையின் பாகங்களைக் கைவிடுதல்

**4**. ஒரு சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை வேண்டுவதற்கென வழக்காளியொருவர் உரிமைக்கோரிக்கையின் அல்லது உரிமைக்கோரிக்கைகளின் ஒருபாகத்தைக் கைவிடுவதற்கு அல்லது கைதுறப்பதற்கு உரிமைகொண்டிருத்தல் வேண்டுமென்ப துடன் சொல்லப்பட்ட பொருள்பட பிராதில் ஓர் உறுதிக்கூற்றை அவர் உள்ளடக்குதலும் வேண்டும்.

பிராதொன்று பிழையானவொரு நீதிமன்றத்துக்கு முன்வைக்கப் படுமிடத்து

**5**. நீதித்துறைச் சட்டத்தின் அத்தியாயம் Vஅ வின் நியதிகளின் படி நியாயாதிக்கங்கொண்டிராத ஒரு மாவட்ட நீதிமன்றத்தில் அல்லது சிறுகோரிக்கை நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு விடயத்திலும் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 47 ஆம் பிரிவின் ஏற்பாடு கள் ஏற்புடையனவாதல் வேண்டும். குடியியல் நடவடிக்கைமுறைச்

சட்டக்கோவையின் 47 ஆம் பிரிவின் நியதிகளின்படி பிராது திருப்பியனுப்பப்படும் பட்சத்தில், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், வழக்குத் தொடுக்கப்பட்ட தேதிக்கும் பிராது திருப்பியனுப்பப்பட்ட தேதிக்கும் இடையேயான காலப்பகுதி, காலவிதிப்புக்கான காலப்பகுதியைக் கணிக்கையில் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

## பாகம் II

## வழக்குரைகளும் அழைப்புக்கட்டளைகளும்

வழக்குரைகள்

**6**. ஒரு சிறுகோரிக்கை நீதிமன்றத்திலான வழக்குரைகள் பின்வருவனவற்றுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்:-

(அ) பிராது;

(ஆ) மறுமொழி; அத்துடன்

(இ) எதிர்மறுமொழி:

ஆயின், எவ்வாறாயினும், எதிர்க்கோரிக்கையிலான உரிமைக் கோரிக்கையெதுவும் இல்லாதவிடத்து, மறுமொழிக்கப்பால் மேலதிக வழக்குரைகள் எவையும் இருத்தலாகாது.

பிராதைக் கோப்பிடுதல்

**7**. (1) வழக்கைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு நியாயாதிக்கங் கொண்டுள்ள தோதான சிறுகோரிக்கை நீதிமன்றத்துக்கு, இதற்கான அட்டவணையிற்றரப்பட்டுள்ள படிவம் இல. 1 இல் முறையாக முத்திரையிடப்பட்ட எழுத்திலான பிராதொன்றை வழக்காளி அல்லது அவரது சார்பில் அவரது பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி சிறுகோரிக்கை நீதிமன்றத்துக்கு முன்வைப்பதன்மூலம் அல்லது அனுப்புவதன்மூலம் சிறுகோரிக்கை நீதிமன்றத்திலான வழக்கு ஒவ்வொன்றும் அவரினால் தொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 40 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினால் குறிப்பிடப்படுவதற்குத் தேவைப்படுத் தப்பட்ட விபரங்களைப் பிராது கொண்டிருத்தல் வேண்டுமென்ப துடன், குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 46 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் சிறுகோரிக்கை நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட அத்தகைய பிராதுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

*சத்தியக் கடுதாசியும் காண்பி பொருட்களும் ஒரு பிராதுடன் இணைக்கப் படுதல்*

**8**. வழக்காளி பிராதை முன்வைப்பதன்மீது அதன்கண் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளுக்கு ஆதாரமாக ஒரு சத்தியக்கடுதாசியை அல்லது சத்தியக்கடுதாசிகளைக் கோப்பிடுதல் வேண்டும் என்பதுடன், பிராதானது எந்த நிகழ்வுகளினது அடிப்படையின் மீதுள்ளதோ அந்த நிகழ்வுகளுக்கு ஆதாரமாக அவரது உடைமையிலுள்ளதும் அல்லது தத்துவத்திலுள்ளதும் அதன்மீது வழக்குத்தொடுக்கப்பட்டதுமான சாதனத்தை, ஒப்பந்தத்தை, உடன்படிக்கையை, நாணயமாற்றுண்டியலை, காசோலையை அல்லது ஆவணத்தை மற்றும் அவரினால் நம்பப்படும் வேறெல்லா ஆவணமுறையான சான்றுகள் எவையேனுமிருப்பின் அவற்றைக் காண்பித்தலும் வேண்டும்.

*அழைப்புக் கட்டளையை வழங்குதலும் சேர்ப்பித்தலும்*

**9**. (1) பிராது ஏற்றுக்கொள்ளப்படுவதற்குமுன்னர் சிறுகோரிக்கை நீதிமன்றம், அதன் தற்றுணிபில், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அது ஒவ்வாததாகவிராத அளவுக்கு, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 46 ஆம் பிரிவிற்றரப்பட்டுள்ளவாறு, ஏதேனும் காரணத்துக்காக அதனை ஏற்றுக்கவனிக்க மறுக்கலாம் மற்றும் திருத்தத்துக்காக அதனைத் திருப்பிக்கொடுக்கலாம் அல்லது பிராதை நிராகரிக்கலாம்.

(2) அத்தகைய பிராது ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல், சிறுகோரிக்கை நீதிமன்றம் இதற்கான அட்டவணையிற்றரப்பட்டுள்ள படிவம் இல. 2 இலான அழைப்புக்கட்டளையை வழங்கலாம்.

(3) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் அத்தியாயம் VIII இன் ஏற்பாடுகள், சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் அழைப்புக்கட்டளை அல்லது மன்றாணை முதலியவற்றின் வழங்குகை, சேர்ப்பிப்பு, திருப்பியனுப்புகை மற்றும் சேர்ப்பிப்புக் கான எண்பிப்புக்கு, இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கு அவை ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

வழக்காளியின் உரிமைக் கோரிக்கையை எதிராளி ஒப்புக் கொண்டால் அவருக் கெதிரான தீர்ப்பு

**10**. அழைப்புக்கட்டளை திருப்பியனுப்பப்படற்பாலதான நாளன்று எதிராளி தோன்றும்போது, நியதிகளுடனோ அல்லது நியதிகளின்றியோ பிராதை அவர் ஒப்புக்கொள்ள உட்கருது கின்றாராவென்பதை நீதிபதி எதிராளியிடம் கேட்கவேண்டு மென்பதுடன், எதிராளி வழக்காளியின் பிராதை ஒப்புக்கொண்டால், சிறுகோரிக்கை நீதிமன்றம் அந்நிகழ்வைப் பதிந்து அவ்வாறு செய்யப்பட்ட ஒப்புதலுக்கிணங்க எதிராளிக்கெதிராகத் தீர்ப்பைப் பதிதலும் வேண்டும். அத்தகைய ஒப்புதல் எழுத்திலிருத்தலும், எதிராளியினால் கையொப்பமிடப்படுதலும், அவரது கையொப்பம் ஒரு சட்டத்தரணியினால் அத்தாட்சிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

மறுமொழியும் மறுமொழியின் தேவைப் பாடுகளும்

**11**. (1) எதிராளி, வழக்காளியின் உரிமைக்கோரிக்கையை ஒப்புக்கொள்ளாதிருப்பின், அவரே அல்லது அவரது சார்பில் அவரது பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி, அவரது எதிர்வாதத்தை யும் வழக்காளிக்கெதிராக அவர் கொண்டிருக்கக்கூடிய எதிர்க் கோரிக்கையிலான ஏதேனும் உரிமைக்கோரிக்கையையும் எடுத்துக்கூறி எதிராளியினால் அல்லது அவரது சட்டத்தரணியி னால் கையொப்பமிடப்பட்டதும் முறையாக முத்திரையிடப்பட்டது மான எழுத்திலான மறுமொழியொன்றைச் சிறுகோரிக்கை நீதிமன்றத்துக்கு வழங்குதல் வேண்டும்.

(2) மறுமொழியானது, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 75 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் குறிப்பிடப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 76 முதல் 78 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய மறுமொழிக்கு ஏற்புடையனவாதலும் இதற்கான அட்டவணையிற்றரப்பட்டுள்ள படிவம் இல. 3 இலிருத்தலும் வேண்டும்.

(3) ஒன்றில் நேரடியாக அல்லது ஒரு சட்டத்தரணிமூலமாக எதிராளி தோன்றிய தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் மறுமொழியானது கோப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன் தோதான சூழ்நிலைகளில் சிறுகோரிக்கை நீதிமன்றம், வழக்காளிக் கான அல்லது வாக்காளிகளுள் ஒவ்வொருவருக்குமான அறிவித்த லுடன் பதிவகத்தில் மறுமொழியைக் கோப்பிடுவதற்குக் கால

அவகாசம் வழங்கினாலொழிய, மறுமொழியைக் கோப்பிடுவதற்குச் சிறுகோரிக்கை நீதிமன்றத்தினால் மேலதிகக் கால அவகாசம் எதுவும் வழங்கப்படுதலுமாகாது.

*சத்தியக் கடுதாசியும் காண்பி பொருட்களும் மறுமொழியுடன் இணைக்கப் படுதல்*

**12.** எதிராளியானவர் மறுமொழியை முன்வைப்பதன்மீது, மறுமொழிக்கு அல்லது எதிர்க்கோரிக்கையிலான உரிமைக் கோரிக்கையில் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளுக்கு ஆதாரமாக ஒரு சத்தியக்கடுதாசியை அல்லது சத்தியக்கடுதாசிகளைக் கோப்பிடுதலும், எதிர்வாதத்துக்கு அல்லது எதிர்க்கோரிக்கை யிலான உரிமைக்கோரிக்கை எந்த நிகழ்வுகளின் அடிப்படை யின்மீதானவையோ அந்த நிகழ்வுகளுக்கு ஆதாரமாக அவரது உடைமையில் அல்லது தத்துவத்தில் உள்ள எல்லா ஆவணங்களை யும் அல்லது அவரினால் நம்பப்படும் மற்றெல்லா ஆவண முறையான சான்றுகள் எவையேனுமிருப்பின் அவற்றையும் காண்பித்தல் வேண்டும்.

*எதிர் மறுமொழி*

**13.** (1) எதிர்க்கோரிக்கையிலான உரிமைக்கோரிக்கையொன்று உள்ளபோது, சத்தியக்கடுதாசியுடன் அல்லது சத்தியக்கடுதாசி களுடன் மற்றும் ஆவணங்கள் எவையேனுமிருப்பின் அவற்றுடன் சேர்த்துப் பதிவகத்தில் எதிர்மறுமொழியொன்று கோப்பிடப் படுவதற்கு அனுமதியளிக்கப்படலாம் என்பதுடன் ஓர் எழுத்திலான மறுமொழி தொடர்பான விதிகள் வழக்காளியினாலான எதிர்மறுமொழியொன்றுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) வழக்காளி எதிர்க்கோரிக்கையிலான உரிமைக் கோரிக்கையை ஒப்புக்கொண்டால், சிறுகோரிக்கை நீதிமன்றம் அத்தகைய ஒப்புதலைப் பதிவேட்டில் பதிதல் வேண்டுமென்பதுடன் அதனைக் கையொப்பமிடும்படி வழக்காளியைத் தேவைப்படுத்துதலும் வேண்டும். சிறுகோரிக்கை நீதிமன்றம் அவ்வாறு செய்யப்பட்ட ஒப்புதலுக்கிணங்க அத்தகைய எதிர்க்கோரிக்கையிலான உரிமைக்கோரிக்கை தொடர்பில் வழக்காளிக்கெதிரான தீர்ப்பைப் பதியலாம். அத்தகைய ஒப்புதல் எழுத்திலிருத்தலும், வழக்காளியி னால் கையொப்பமிடப்படுதலும், அவரது கையொப்பம் சட்டத்தரணியொருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

*எதிர்க்கோரிக்கையிலான உரிமைக்கோரிக்கை, சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் பணவகையான நியாயாதிக்கத்துக்கு அப்பாற்பட்டதாக இருக்குமிடத்து*

**14.** எதிர்க்கோரிக்கையிலான உரிமைக்கோரிக்கையானது சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் பணவகையான நியாயாதிக்கத்தை விஞ்சுமிடத்து, சிறுகோரிக்கை நீதிமன்றம், அதன்கண் குறிப்பிடப்பட்ட உரிமைக்கோரிக்கையின் பணத்தொகை சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் பணவகையான நியாயாதிக்கத்தை விஞ்சுகின்றமை எவ்வாறிருப்பினும், எதிர்க்கோரிக்கையில் அத்தகைய உரிமைக்கோரிக்கையைக் கேட்கலாமென்பதுடன் வழக்குகளின் எண்பெருக்கத்தைத் தவிர்ப்பதற்குச் சட்டத்துக் கிணங்கத் தீர்வையையும் பதியலாம்.

*சத்தியக் கடுதாசிகளுடனும் ஆவணங்களுடனும் சேர்த்து மறுமொழியையும் எதிர்மறுமொழியையும் சேர்ப்பித்தல்*

**15.** எல்லாச் சத்தியக்கடுதாசிகளும், மறுமொழியுடனும் எதிர்மறுமொழியுடனும் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களும், மறுமொழியுடன் அல்லது எதிர்மறுமொழியுடன் சேர்த்து எதிர்த்திறத்தவருக்கு அல்லது திறத்தவர்களுக்குச் சேர்ப்பிக்கப் படுதல் வேண்டும். சிறுகோரிக்கை நீதிமன்றம் அதன் தற்றுணிபின்படி தவறுகைபுரிகின்ற திறத்தவர்மீது செலவுதொகை களை விதித்தல் வேண்டும்.

*வழக்குரைகளைத் திருத்துதல்*

**16.** எவையேனும் வழக்குரைகளின் திருத்தத்திற்கான விண்ணப்பமெதுவும், வேறேதேனும் ஏதுவின் மேலன்றியும், அத்தகைய திருத்தமானது அனுமதிக்கப்படாவிடின் பாரியதும் பரிகரிக்கப்பட முடியாததுமான அநீதி விளைவிக்கப்படுமெனவும், அத்துடன் அவ்வாறு விண்ணப்பபிக்கும் திறத்தவர் மன்னிக்கத்தகாத கவனக்கேட்டிற்குக் குற்றவாளியாக இருக்க வில்லையெனவும் அதனால் பதியப்பட வேண்டிய காரணங் களுக்காகவும் சிறுகோரிக்கை நீதிமன்றம் திருப்திப்பட்டாலொழிய அனுமதிக்கப்படுதலாகாது:

ஆயின், சிறுகோரிக்கை நீதிமன்றம், எவ்வேளையிலும் எவரேனும் திறத்தவரினால் செய்யப்படுகின்ற விண்ணப்பமொன்றின் மீது வழக்குரைகளில் எழுதும்போது விடப்பட்ட அல்லது கணக்கிடுதலில் விடப்பட்ட பிழைகளைத் திருத்தலாம்.

## பாகம் III

### ஆவணமுறையான சான்று

*வழக்குக்கான திறத்தவரொருவர், ஆணைகள், அறிக்கைகள், ஆவணங்களின் சான்றுப் படுத்தப்பட்ட பிரதிகள் மற்றும் ஆவணங்களைக் கண்டுபிடித்தல் என்பனவற்றைக் கோருமிடத்து*

**17.** (1) வழக்குக்கான எவரேனும் திறத்தவர், மற்றெல்லாத் திறத்தவர்களுக்குமான அறிவித்தலுடன் 22 ஆம் பிரிவின் நியதிகளின்படி தீர்த்துவைத்தலுக்காக நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று அல்லது அத்தேதிக்குமுன்னர் பின்வருவனவற்றுக்கான விண்ணப்பமொன்றைச் செய்யலாம்:-

(அ) ஆணைகளை வழங்குவதற்கும்;

(ஆ) நிகழ்வுகள்பற்றி விசேடமாக மற்றும் சுயேச்சையாக அறிந்துள்ள ஆட்களிடமிருந்து அறிக்கைகளைக் கோருவதற்கும்;

(இ) எவரேனும் திறத்தவரின் உடைமையிலுள்ள அல்லது தத்துவத்திலுள்ள ஆவணங்களைக் கண்டுபிடிப்பதற்காக, காண்பிப்பதற்காக, சோதனையிடுவதற்காக அல்லது ஆவணங்களின் மெய்யானதன்மையை ஒப்புக்கொள்வதற்காகக் கட்டளை ஆக்குவதற்கும்;

(ஈ) எவரேனும் பகிரங்க அலுவலரின், ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின், மாகாணசபையின், ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின், வங்கியின், சபையின், கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவின், பங்காண்மையின், வைத்தியசாலையின், மருத்துவ நிறுவகத்தின், நீதிமன்றத்தின், நியாயசபையின் அல்லது அத்தகைய ஏதேனும் ஒத்த நிறுவனத்தின் கட்டுக்காப்பிலுள்ள எவையேனும் ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளின் வழங்குகைக்காகக் கட்டளை ஆக்குவதற்கும்; அல்லது

(உ) எந்தக் கருமத்தின்மீது திறத்தவர்கள் வேறுபாடு கொண்டுள்ளனரோ அந்த ஏதேனும் கருமத்தின்மீது அவர் தகுதியானவை அல்லது விரும்பத்தக்கவை எனக்

கருதக்கூடியவாறாக எவரேனும் மூன்றாந்திறத்தவரின் உடைமையிலுள்ள ஆவணங்களைக் கண்டுபிடித்தல் தொடர்பிலான அத்தகைய வேறு தோதான கட்டளைகளை ஆக்குவதற்கும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றைப் பெற்றுக்கொண்ட திறத்தவர் அத்தகைய கட்டளைத்தேதியிலிருந்து இரண்டு வாரங்களினுள் நடவடிக்கைகளை எடுத்தல்வேண்டுமென்பதுடன், அத்தகைய திறத்தவர் அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கத்தவறும் பட்சத்தில், சிறுகோரிக்கை நீதிமன்றம், அத்தகைய தவறுகையைப் பொருட்படுத்தாமலும் எவையேனும் செலவுதொகைகளுக்கு அமையவும், மேலதிக வழக்குநடவடிக்கைகளைத் தொடரலாம்.

ஆவணங்களைக் கண்டுபிடித்தல், காண்பித்தல், சோதனையிடுதல், பாதுகாத்தல் அல்லது ஆவணங்களின் மெய்யான தன்மையை ஒப்புக் கொள்ளுதல்

**18.** (1) பதினேழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் அத்தியாயங்கள் XVI மற்றும் XXIX என்பவற்றின் ஏற்பாடுகள், ஏதேனும் ஆவணத்தைக் கண்டுபிடித்தல், காண்பித்தல், சோதனையிடுதல், பாதுகாத்தல் அல்லது ஏதேனும் ஆவணத்தின் மெய்யானதன்மையை ஒப்புக்கொள்ளுதல் என்பவற்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் அத்தியாயம் XXIX இன் ஏற்பாடுகள், அவை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத அந்தளவிற்கு சிறுகோரிக்கை நீதிமன்றத்தால் வழங்கப்படும் ஆணைகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

வினாக் கொத்துக்கள்

**19.** குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 94 முதல் 100 வரையிலான (இரண்டுமுட்பட்ட) பிரிவுகளின் ஏற்பாடுகள் சிறுகோரிக்கை நீதிமன்றத்திலான வழக்குநடவடிக்கைகளுக்கு ஏற்புடையனவாதலாகாது

*வழக்கு நடவடிக்கைகளின் போது கண்டு பிடிக்கப்பட்ட ஆவணங்கள் சத்தியக் கடுதாசியுடன் சேர்த்துக் காண்பிக்கப் படுதல்*

**20.** சிறுகோரிக்கை நீதிமன்றம், அதன் சொந்தப் பிரேரணையின்மீது அல்லது எவரேனும் திறத்தவரின் கோரிக்கையின்பேரில், திறத்தவர்கள் வேறுபாடு கொண்டுள்ளவர்களாகவுள்ளவையும், ஆனால் பிராதுடன் அல்லது மறுமொழியுடன் அல்லது எதிர்மறுமொழியுடன் இணைக்கப்படாதவையுமான கருமங்களின் மீது வழக்குநடவடிக்கைகளின்போது கண்டுபிடிக்கப்பட்ட ஆவணங்கள் சத்தியக்கடுதாசியொன்றுடன் காண்பிக்கப்படுவதற்கு அனுமதியளிக்கலாம்.

*தீர்த்து வைத்தல்கள்*

**21.** (1) சிறுகோரிக்கை நீதிமன்றம், மறுமொழி அல்லது எதிர்மறுமொழி ஏதேனுமிருப்பின் அது கோப்பிடப்பட்டதன்மேல் உடனடியாக, வழக்குரைகள் பூர்த்திசெய்யப்பட்ட தேதியிலிருந்து நான்குவாரக் காலப்பகுதியினுள் தீர்த்துவைத்தலுக்கானவொரு தேதியை நிர்ணயித்தல் வேண்டுமென்பதுடன் வழக்கானது விளக்கத்துக்காக நிர்ணயிக்கப்படுமுன்னர், பிணக்குத் தொடர்பிலான தீர்வையொன்றுக்கு வரும்படி திறத்தவர்களை வற்புறுத்துதலும், அத்தகைய தீர்வு ஏதேனுமிருப்பின் அதனைப் பதிவீடு செய்தலும், அதற்கிணங்கத் தீர்ப்பையும் தீர்வையையும் பதிதலும் சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் கடமையாதலும் வேண்டும். திறத்தவரொருவர், போதிய காரணமின்றித் தீர்த்துவைத்தலுக்காக நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று நேரடியாகத் தோன்றத் தவறுவாராயின், சிறுகோரிக்கை நீதிமன்றம், அதேநாளன்று திறத்தவர்கள் ஒரு தீர்த்துவைத்தலைச் செய்துகொண்டாலொழிய, அத்தகைய தவறுகைபுரிகின்ற திறத்தவர் அல்லது திறத்தவர்களுக்கெதிராகச் செலவுதொகைகளுக்கான கட்டளையையிடலாம்.

(2) தோதான ஏதேனும் வழக்கில் சிறுகோரிக்கை நீதிமன்றம் அபிப்பிராயப்படின், திறத்தவர்களின் சம்மதத்துடன் இறுதித் தீர்ப்பானது வாய்மொழிமூலமான சான்றில்லாமல் திறத்தவர்களினால் இணைக்கப்பட்ட வழக்குரைகள், சத்தியக்கடுதாசிகள் மற்றும் ஆவணங்களின்மீது மட்டுமே எடுத்துமொழியப் படலாமென்பதுடன் சமர்ப்பணங்கள் என்றவகையான எல்லாத் திறத்தவர்களையும் கேட்டதன்மேல், சிறுகோரிக்கை நீதிமன்றம் அதற்கிணங்கத் தீர்ப்பை எடுத்துமொழிதலும் தீர்வையைப் பதிதலும் வேண்டும். இல்லாவிடின், சிறுகோரிக்கை நீதிமன்றம் விளக்கத்துக்காக வழக்கை நிர்ணயிக்கலாம்.

**22.** (1) வழக்கானது திறத்தவர்களிடையே தீர்த்துவைக்கப்பட முடியாதிருப்பின், சிறுகோரிக்கை நீதிமன்றம் அக்கருமத்தை விளக்கத்துக்காக நிர்ணயித்தல் வேண்டுமென்பதுடன் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள், அவை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு அத்தகைய விளக்கத்துக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

தீர்த்து வைத்த லெதுவும் இராதிருப்பின், வழக்கானது விளக்கத்துக்காக நிர்ணயிக்கப் படுதல்

(2) முன்விளக்கம் தொடர்பில் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் அத்தியாயம் XVIIஅ இன் ஏற்பாடுகள், சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் வழக்குநடவடிக்கைகளுக்கு ஏற்புடையனவாதலாகாது.

பாகம் IV

**விளக்கம்**

**23.** (1) விளக்கத் தேதியன்று, சிறுகோரிக்கை நீதிமன்றம், திறத்தவர்களிடையே ஒப்புதல்களைப் பதிதல் வேண்டும். எவ்வாறாயினும், இவ்வழக்குநடவடிக்கைகளின் நோக்கங்களுக்காக, திறத்தவர்களின் வழக்கெழுவினாக்களைப் பதிவது கட்டாய மானதல்ல என்பதுடன் சிறுகோரிக்கை நீதிமன்றம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பிணக்கைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு முற்படலாம்:

விளக்கம்

ஆயின், சம்பந்தப்பட்ட விசேட கருமங்களின் நோக்கில் வழக்கெழு வினாக்கள் பதியப்படுதல் வேண்டுமெனச் சிறுகோரிக்கை நீதிமன்றம் அபிப்பிராயப்படும் பட்சத்தில், சிறுகோரிக்கை நீதிமன்றம், அதன் சொந்தப் பிரேரணையின்மீது, வழக்குரைகள், சத்தியக்கடுதாசிகள் மற்றும் ஆவணங்கள் எவையேனுமிருப்பின் அவற்றிலிருந்து எழுகின்ற சொல்லப்பட்ட வழக்கெழுவினாக்களைப் பதிவதற்கு முற்படலாமென்பதுடன் வழக்கைக் கேட்பதற்கும் முற்படலாம்.

(2) வழக்குரைகளுடன் திறத்தவர்களினால் கோப்பிடப்பட்ட சத்தியக்கடுதாசிகளும் சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் அனுமதியுடன் கோப்பிடப்பட்ட மேலதிகச் சத்தியக்கடுதாசிகளும்,

முறையான திறத்தவரின் அல்லது திறத்தவர்களின் முதனிலைச் சான்றாகக் கொள்ளப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், சிறுகோரிக்கை நீதிமன்றம், பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டும் ஒரு தீர்ப்பை எடுத்துமொழிவதனை இயலச்செய்வதற்கு அத்தகைய சான்றைப் பெற்றுக்கொள்வது அவசியமெனக் கருதினால், வாய்மொழி மூலமானதாயினுஞ்சரி அல்லது ஆவணமுறையான தாயினுஞ்சரி, மேலதிகச் சான்றை நெறிப்படுத்துவதற்குத் திறத்தவர்களுக்கு அனுமதியளிக்கலாம்:-

(அ) பிணக்கிலுள்ள கருமங்களைத் தீர்மானிப்பதற்கு ஏதேனும் மேலதிகச் சான்று இயைபாகவுள்ளவிடத்து;

(ஆ) நியாயமான விழிப்புக்கவனத்துடனும் மிகச்சிறந்த முயற்சிகளுடனும் முதற்சந்தர்ப்பத்தில் வழக்குரை களுடன் சேர்த்து ஏதேனும் மேலதிகச் சான்று பெற்றுக்கொள்ளப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க முடியாமையும் மற்றும் காண்பிக்கப்படாமையானது அத்தகைய திறத்தவரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற் பட்டுள்ளவிடத்து;

(இ) நெறிப்படுத்தப்படவேண்டிய ஏதேனும் மேலதிகச் சான்று ஆவணமுறையானதாகவிருப்பின், எந்த ஆவணத்தின் மெய்யானதன்மை எதிர்த்திறத்தவரினால் ஆட்சேபிக்கப் படுகின்றதோ அந்த ஆவணத்தை எண்பிப்பது அவசிய மாகவுள்ளவிடத்து; அத்துடன்

(ஈ) ஒரு சத்தியக்கடுதாசி என்றவகையாகச் சான்றளிப்பதற்கு இயலாதுள்ள அலுவலகமுறையான சாட்சியின் அல்லது வேறெவரேனும் சாட்சியின் சான்று நெறிப்படுத் தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் பட்சத்தில், திறத்தவர்கள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சாட்சியின்மீது அழைப்புக்கட்டளை எடுக்கவேண்டியுள்ளவிடத்து.

**24.** (1) சிறுகோரிக்கை நீதிமன்றம் வழக்குக்கான எவரேனும் திறத்தவரினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மீது, நீதிநலன் கருதி, வழக்குரைகளில் குறிப்பீடுசெய்யப்படாத வேறெவரேனும் சாட்சியை அல்லது சாட்சிகளை அழைப்பதற்கு அல்லது வழக்குரைகளில் இணைக்கப்படாத ஆவணங்களைக் காண்பிப்பதற்கு அனுமதியளிக்கலாம். மேலும் சிறுகோரிக்கை நீதிமன்றம், அவசியமென அது கருதுமிடத்து, ஆணைகள் என்றவகையாகக் கண்டுபிடிக்கப்பட்ட அல்லது வெளிக்கொணரப்பட்ட ஆவணங்களின்மீது மேலதிகச் சான்றை நெறிப்படுத்துவதற்குத் திறத்தவர்களுக்கு அனுமதியளிக்கலாம்.

*திறத்தவர்கள் வேறுபாடு கொண்டவர்களாகவிருக்குமிடத்து, சிறுகோரிக்கை நீதிமன்றம் எவரேனும் சாட்சியைக் கட்டளை விட்டழைக்கலாம் அல்லது ஏதேனும் ஆவணம் காண்பிக்கப்படுவதனைத் தேவைப்படுத்தலாம்*

(2) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 121 ஆம், 175 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் வழக்குநடவடிக்கைகளுக்கு ஏற்புடையனவாதலாகாது.

(3) (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச்சட்டத்திலுள்ள ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 151அ என்னும் பிரிவின் (1)ஆம், (2)ஆம், (3)ஆம் மற்றும் (4)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், சத்தியக் கடுதாசியொன்றின்மீது சாட்சியொருவரை விசாரணைசெய்தல், குறுக்குவிசாரணை, மீள்விசாரணை மற்றும் அத்தகைய வேறு சத்தியக்கடுதாசியுடன் இணைக்கப்பட்ட ஏதேனும் ஆவணத்தின் ஏல்தகைமை மற்றும் மெய்யானதன்மை என்பவற்றுக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அவை ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**25.** (1) ஒரு சிறுகோரிக்கை நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கண்டுபிடிக்கப்பட்ட ஏதேனும் ஆவணத்தின் மெய்யானதன்மை, சட்டத்துக்கிணங்க அதற்காகக் குறிப்பிடப்பட்ட செல்லுபடியான காரணங்களுடன் எதிர்த்திறத்தவரினால் ஆட்சேபிக்கப்பட்டாலொழிய, அத்தகைய ஆவணம் பற்றிய எண்பிப்பைச் சமர்ப்பித்தல் அவசியமாதலாகாது.

*ஆவணங்கள் ஆட்சேபிக்கப்பட்டாலொழிய அவை பற்றிய எண்பிப்பு அவசியமல்ல*

(2) சிறுகோரிக்கை நீதிமன்றம் ஆவணத்தின் எண்பிப்புப்பற்றிய சான்று நெறிப்படுத்தப்பட்டபின்னர் ஆவணத்தை ஏற்றுக்கொள்ளும்

பட்சத்தில், ஆவணத்தை ஆட்சேபிக்கும் திறத்தவர், வரிவிதிக்கப்பட்ட செலவுதொகைகளுடன் சேர்த்து மேலதிகமாக, அத்தகைய ஆவணத்தை எண்பிப்பதற்கு உறப்பட்ட செலவு தொகைகளைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

*தீர்ப்பும் தீர்வையும்*

**26**. குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் அத்தியாயம் XX இன் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அவை ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு, சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது தீர்வை எடுத்துமொழியப் படுவதற்கும் அதுதொடர்பாவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*வழக்கு நடவடிக்கைகளின் துரிதமான கையாளுகை*

**27**. ஒரு சிறுகோரிக்கை நீதிமன்றத்திலான எல்லா வழக்கு நடவடிக்கைகளும் அதற்கேற்புடையற்பாலதாக இருக்கக்கூடிய வாறான அத்தகைய சட்டத்துக்கிணங்க இயன்றளவு துரிதமான முறையில் முடிவுறுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், நீதிபதியி னால் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக அதற்கிணங்கச் செயலாற்றுவதற்கு அவர் தடுக்கப்பட்டாலொழிய, அத்தகைய வழக்குநடவடிக்கைகள் தொடங்கியதிலிருந்து பதினெட்டு மாதங்களினுள் அவ்வழக்குநடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்குச் சிறுகோரிக்கை நீதிமன்றம் எல்லா முயற்சிகளையும் செய்தலும் வேண்டும்.

*திறத்தவர்களின் தவறுகை*

**28**. குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் அத்தியாயம் XII இல் அடங்கியுள்ள ஏற்பாடுகள், தவறுகைகளின்மீது ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கெதிராகச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீடு தொடர்பாகத்தவிர, திறத்தவர்களின் தவறுகை யினது விளைவுகளும் பரிகாரமும் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் V

## மேன்முறையீடுகள்

மேன்முறையீடும் மேன்முறையீடு முடிவுறாதிக்கும் வரை நிறைவேற்றுகையை நிறுத்தி வைத்தலும்

**29**. (1) எந்த ஆள் எந்த வழக்கில், வழக்குநடவடிக்கையில் அல்லது கருமத்தில் திறத்தவரொருவராக உள்ளாரோ அந்த ஏதேனும் வழக்கில், வழக்குநடவடிக்கையில் அல்லது கருமத்தில் சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பினால் இன்னலுறும் அந்த எவரேனுமாள் நிகழ்விலான அல்லது சட்டத்திலான ஏதேனும் வழுவுக்காக அத்தகைய தீர்ப்புக்கெதிராக அரசியலமைப்பின் உறுப்புரை 154ஞ என்பதன்கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

(2) எந்த ஆள் எந்த வழக்கில், வழக்குநடவடிக்கையில் அல்லது கருமத்தில் திறத்தவரொருவராகவுள்ளரோ அல்லது திறத்தவரொருவராகவிருப்பதற்கு நாடுகின்றாரோ அந்த ஏதேனும் வழக்கின், வழக்குநடவடிக்கையின் அல்லது கருமத்தின்போது ஏதேனும் சிறுகோரிக்கை நீதிமன்றத்தினால் அளிக்கபட்டதும் தவறுகையின்மீது பதியப்பட்டதுமான தீர்ப்பைத் தள்ளிவைக்கின்ற அல்லது தள்ளிவைக்க மறுக்கின்ற கட்டளை உட்பட ஒரு கட்டளையினால் இன்னலுறும் அந்த எவரேனுமாள், அரசியலமைப்பின் உறுப்புரை 154ஞ என்பதன்கீழ் தாபிக்கப்பட்ட மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்திடமிருந்து முதலில் கேட்டுப் பெறப்பட்ட அனுமதியுடன், நிகழ்விலான அல்லது சட்டத்திலான ஏதேனும் வழுவைத் திருத்துவதற்காக அத்தகைய கட்டளைக் கெதிராக அத்தகைய மேல் நீதிமன்றத்துக்கு மேன்முறையீ டொன்றைச் செய்யலாம்.

(3) மேன்முறையீடுகள் தொடர்பாகக் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் அத்தியாயங்கள் LVIII, LIX, LX மற்றும் LXI என்பவற்றின் ஏற்பாடுகள், அவை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்குச் சிறுகோரிக்கை நீதிமன்றங்களிலிருந்தான மேன்முறையீடுகளுக்கு ஏற்புடையன வாதல் வேண்டும்.

(*4*) இச்சட்டத்தின் கீழ் மேன்முறையீடு செய்வதற்கான அனுமதிக்கான அல்லது இறுதி மேன்முறையீட்டுக்கான ஏதேனும் விண்ணப்பம், நீதிபதியானவர் அவரினால் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக அதற்கிணங்கச் செயலாற்றுவதற்குத் தடுக்கப்பட்டாலொழிய, அத்தகைய விண்ணப்பம் அல்லது மேன்முறையீடு செய்யப்பட்டதிலிருந்து பன்னிரெண்டு மாதக் காலப்பகுதியினுள் கேட்டு முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் VI

## பொது ஏற்பாடுகள்

*சான்றுக் கட்டளைச் சட்டம் வழக்கு நடவடிக்கை களுக்கு ஏற்புடையதாதல்*

***30***. (*14* ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் முன்னரான வழக்குநடவடிக்கைகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*குறிப்பான ஏற்பாடு செய்யப்படாத விடத்து*

***31***. (*1*) எந்தக் கருமத்துக்காக இச்சட்டத்தில் ஏற்பாடெதுவும் செய்யப்படவில்லையோ அந்த ஏதேனும் கருமம் எழுமாயின், அதேபோன்ற கருமத்தை ஆளுகின்ற குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள், விடயத்தின் நீதி தேவைப் படுத்தக்கூடியவாறான அத்தகைய பொருத்தமான இசைவாக்கங்களுடன், அத்தகைய ஏற்பாடுகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராதிருப்பின், கடைப்பிடிக்கப்பட்டு ஏற்புடையன வாக்கப்படுதல் வேண்டும்.

(*2*) சிறுகோரிக்கை நீதிமன்றத்திலான வழக்குநடவடிக்கைகள் எவையும், நடவடிக்கைமுறையிலான எவையேனும் தொழினுட்பங்கள் காரணமாக அல்லது வழக்குரைகளில், சத்தியக்கடுதாசிகளில் அல்லது படிவங்களிலான விதிமுறைப்பட்ட குறைபாடு அல்லது ஒழுங்கீனம் காரணமாகச் செல்லுபடியற்றனவாக்கப்படுதலாகாதென்பதுடன் சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதி, அவரது தற்றுணிபின்பேரிலும் நீதிநலன்கருதியும், அத்தகைய குறைபாடுகளினால் அல்லது ஒழுங்கீனங்களினால் திறத்தவர்களுக்குக்

கணிசமானளவு பங்கம் விளைவிக்கப்பட்டிருந்தாலொழிய அல்லது நீதித்தவறுதல் ஏற்பட்டிருந்தாலொழிய, அத்தகைய தொழினுட்பங்கள் நீதிநிருவாகத்துக்குத் தடைசெய்யமாட்டாது என்பதனை உறுதிப்படுத்துதலும் வேண்டும்.

**ஒரு விசேட இடாப்பு**

**32.** இச்சட்டத்தின்கீழ் மாவட்ட நீதிபதி சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் நீதிபதியாகப் பணியாற்றுமிடத்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகளுக்காக விசேட இடாப்பொன்று வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

**நிலை பெயர்கால ஏற்பாடுகள்**

**33.** ஒரு சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள்ளான ஏதேனும் கருமம் தொடர்பில், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முற்போந்த நாளன்று ஆனால் முன்விளக்கம் தொடங்குவதற்கு முன்னர், ஏதேனும் நீதிமுறை மாவட்டத்தின் மாவட்ட நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எல்லா வழக்குநடவடிக்கைகளும், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று தோதான சிறுகோரிக்கை நீதிமன்றத்துக்கு அகற்றப்பட்டதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சிறுகோரிக்கை நீதிமன்றம், அத்தகைய மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கானது எந்த நடவடிக்கைமுறைக்கிணங்கத் தொடுக்கப்பட்டதோ அந்த நடவடிக்கைமுறைக்கிணங்க அதனை ஏற்றுக் கவனிப்பதற்கும், கேட்டுத் தீர்மானிப்பதற்கும் அல்லது தொடர்வதற்கும் அல்லது பூர்த்திசெய்வதற்கும் நியாயாதிக்கங்கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய மாவட்ட நீதிமன்றத்தின்முன்னரான ஒவ்வொரு வழக்குத் தொடர்பிலும் ஆக்கப்பட்ட எல்லாக் கட்டளைகளும், அவை அச்சிறுகோரிக்கை நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டுள்ளன என்றாற்போன்று அதே வலுவையும் பயனையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

**பொருள் கோடல்**

**34.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய–

"குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை" என்பது, (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை என்று பொருளாகும்;

“*நீதித்துறைச் சட்டம்*” என்பது, 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டம் என்று பொருளாகும்;

“*அமைச்சர்*” என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் நீதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர் என்று பொருளாகும்; அத்துடன்

“*சிறுகோரிக்கை*” என்பது, நீதித்துறைச் சட்டத்தின் 29அ என்னும் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி குறித்துரைக்கப்பட்ட தொகையை அல்லது காலத்துக்குக் காலம் அமைச்சரினால் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகையை விஞ்சாததும் நீதித்துறைச் சட்டத்தின் ஏழாம் அட்டவணையிற் குறிப்பீடுசெய்யப் பட்டதுமானவொரு தனிசு, சேதவீடு அல்லது கோரிக்கை என்று பொருளாகும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**35**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை**

படிவம் இல. 1 [பிரிவு 8(1)]

பிராது

......................சிறுகோரிக்கை நீதிமன்றத்தில்

வழக்கில:
பிராதின் தேதி:
உரிமைக்கோரிக்கையின்
தன்மை:

வழக்காளியின் (வழக்காளிகளின்) பெயர் (பெயர்கள்): .............
முகவரி (முகவரிகள்): ..........................................................
தொலைபேசி இல: ..............................................................
மின்னஞ்சல் (ஏதேனுமிருப்பின்): ............................................

-எதிர்-

எதிராளியின் (எதிராளிகளின்) பெயர் (பெயர்கள்): .................
முகவரி (முகவரிகள்): ..........................................................
தொலைபேசி இல: .............................................................
மின்னஞ்சல் (அறிந்திருப்பின்): .............................................

..............................................................................................................

சட்டத்தரணி ............................. அவர்களின்மூலம் தோன்றுகின்ற மேலே பெயர்குறிப்பிடப்பட்ட வழக்காளியின் (அல்லது வழக்காளிகளின்) பிராது பின்வருமாறு குறிப்பிடுகின்றது:-

வழக்குக் காரணம் எங்கு, எவ்வாறு மற்றும் எப்போது எழுந்ததென்பது உட்பட, ஒவ்வொரு வழக்குக் காரணமாகவும் அமைகின்ற சூழ்நிலைகள்பற்றிய சுருக்கக் கூற்று-

1. ....................................................................................

2. ....................................................................................

உரிமைக்கோரிக்கையின் பெறுமதி (வட்டியின்றி): ...................................

வட்டி (கோரப்படின்): ...................................

முழு உரிமைக்கோரிக்கையினதும் பெறுமதி: ...................................

(வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையில் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட தொகையை முழு உரிமைக்கோரிக்கையும் விஞ்சுகின்ற விடயத்தில் (வட்டியின்றி இது தற்போது .............................. ரூபாவாக வுள்ளது), .......................... சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் நியாயாதிக் கத்தினுள் வழக்கைக் கொண்டுவருவதற்கென (வட்டியின்றி முழு உரிமைக்கோரிக்கையையும் அவர் ........................... ரூபாவாக மட்டுப்படுத்து கின்றாரென வழக்காளி பிராதில் சுட்டிக்காட்டலாம்)

.........................................................................................

கோரிக்கை

.........................................................................................

..............................................

வழக்காளியின் கையொப்பம்
அல்லது
(வழக்காளியின் /வழக்காளியின்
சட்டத்தரணியின்) கையொப்பம்

[*பிரிவு 10(2)*]

*படிவம் இல. 2*

**சிறுகோரிக்கை நீதிமன்றங்களுக்கான விசேட நடவடிக்கைமுறை பற்றியவொரு வழக்கில் அழைப்புக்கட்டளையைச் சேர்ப்பிப்பதற்கான அழைப்புக்கட்டளைப் படிவம்**

மேலே பெயர்குறிப்பிடப்பட்ட எதிராளிக்கு (அல்லது எதிராளிகளுக்கு)

மேலே பெயர்குறிப்பிடப்பட்ட வழக்காளி, அவருக்கு வருமதியான .......................... ரூபா பணத்தொகைக்காக ..................... வீதத்திலான வட்டியுடன் சேர்த்து (உரிமைக்கோரிக்கையின் விபரங்களைக் குறிப்பிடவும்) ....................... ஆம் ஆண்டின் ................. ஆம் இலக்க, சிறுகோரிக்கை நீதிமன்றங்களின் நடவடிக்கைமுறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் இந்தச் சிறுகோரிக்கை நீதிமன்றத்தில் உங்களுக்கெதிராக வழக்கொன்றைத் தொடுத்துள்ளாராதலால், உங்கள் மறுமொழி ஏதேனுமிருப்பின் அதனை, ஒரு சத்தியக்கடுதாசியுடன் அல்லது சத்தியக்கடுதாசிகளுடன் மற்றும் பிராதுக்கான உங்கள் எதிர்வாதத்துக்கு ஆதாரமாக உங்கள் உடைமையிலும் தத்துவத்திலும் உள்ள வேறு ஆவணங்களின் பிரதிகளுடன் சேர்த்து 2022 ஆம் ஆண்டு................ மாதம் ................. ஆந்நாளன்று அல்லது அதற்குமுன்னர் மு.ப. 9.00 மணிக்குச் சிறுகோரிக்கை நீதிமன்றத்தில் கோப்பிடும்படி நீங்கள் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்கள் என்பதுடன் சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதற்குமுன்னர் எவையேனும் ஆவணங்களுடன் சேர்த்து நீங்கள் மறுமொழியையும் சத்தியக்கடுதாசியையும் கோப்பிடுவதில் தவறுகை புரிந்தால், வழக்கானது மேற்கொண்டுநடாத்தப்பட்டு மறுதிறத்தவரில்லாமல் கேட்கப்படுமென்பதனைக் கவனத்துட்கொள்ளுமாறு நீங்கள் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்கள்.

நீங்கள் பதிவுசெய்யப்பட்டவொரு சட்டத்தரணிமூலம் தோன்றாவிடின், எல்லாச் சட்டப்படியான அறிவித்தல்களும் எம்முகவரியில் சேர்ப்பிக்கப்பட வேண்டுமோ அம்முகவரியைக் குறிப்பிட்டு நிருபமொன்றைக் கோப்பிடும்படி நீங்கள் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

<u>பின்வருவன இத்துடன் இணைக்கப்படுகின்றன:</u>

பிராதின் பிரதியொன்று
சத்தியக்கடுதாசியின்/சத்தியக்கடுதாசிகளின் பிரதியொன்று
பின்வரும் ஆவணங்களின் பிரதிகள்:

1.
2.

சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் கட்டளைப்படி
(கையொப்பமிடப்பட்டது).............பதிவாளர்
2022 ஆம் ஆண்டு......மாதம்...........ஆந்நாள்

[பிரிவு 12(2)]

படிவம் இல. 3

**மறுமொழி**

..................... **சிறுகோரிக்கை நீதிமன்றத்தில்**

வழக்கில:
பிராதின் தேதி:
உரிமைக்கோரிக்கையின்
தன்மை:

வழக்காளியின் (வழக்காளிகளின்) பெயர் (பெயர்கள்): .............
முகவரி (முகவரிகள்): ..........................................................
தொலைபேசி இல: ..............................................................
மின்னஞ்சல் (ஏதேனுமிருப்பின்): ............................................

-எதிர்-

எதிராளியின் (எதிராளிகளின்) பெயர் (பெயர்கள்): ..................
முகவரி (முகவரிகள்): ..........................................................
தொலைபேசி இல: .............................................................
மின்னஞ்சல் (அறிந்திருப்பின்): .............................................

..................................................................................................
.........................................

சட்டத்தரணி ........................... அவர்களின்மூலம் தோன்றுகின்ற மேலே பெயர்குறிப்பிடப்பட்ட எதிராளியின் (அல்லது எதிராளிகளின்) மறுமொழி பின்வருமாறு குறிப்பிடுகின்றது:-

நிகழ்வு மற்றும் சட்டக் கருமங்களையும் எதிராளி அவரது எதிர்வாதத்துக்காக வழக்கின் எச்சூழ்நிலைகளின்மேல் நம்புவதற்கு உட்கருதுகின்றாரோ அச்சூழ்நிலைகளையும் எளிமையாகவும் சுருக்கமாகவும் எடுத்துக்கூறி பிராதின் பல்வேறு உறுதிக்கூற்றுக்களை ஒப்புக்கொள்கின்ற அல்லது மறுக்கின்ற சுருக்கக்கூற்று:-

1. ...........................................................................................

2. ...........................................................................................

சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள்ளான எதிர்கோரிக்கையிலான உரிமைக்கோரிக்கையொன்றை எதிராளி நிலைநாட்டினால், எதிராளி எதிர்க்கோரிக்கையில் செய்கின்ற அத்தகைய உரிமைக்கோரிக்கையின் ஏதுவாக

அமைகின்ற நிகழ்வுகளின் எளிமையானதும் சுருக்கமானதுமானவொரு கூற்று:-

1. ...........................................................................................

2. ...........................................................................................

உரிமைக்கோரிக்கையைச் சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் கொண்டுவருவதற்கென எதிராளி அவரது எதிர்கோருரிமையின் ஒருபாகத்தைக் கைதுறந்திருப்பின், அமைச்சரினால் ஆக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட தொகைக்கு (வட்டியின்றி) அவ்வாறு கைதுறக்கப்பட்டு எதிர்கோருரிமையை மட்டுப்படுத்திய தொகையைச் சுட்டிக்காட்டுகின்றவொரு கூற்று

...........................................................................................................

எதிர்கோருரிமையின் பெறுமதி (வட்டியின்றி):- ....................................

வட்டி (கோரப்படின்):- .................................

...............................................................................................................

கோரிக்கை:-

...............................................................................................................

எதிராளியின் கையொப்பம்
அல்லது
(எதிராளியின் / எதிராளியின் சட்டத்தரணியின்)
கையொப்பம்

<u>பின்வருவன இத்துடன் இணைக்கப்படுகின்றன:</u>

சத்தியக்கடுதாசியின்/சத்தியக்கடுதாசிகளின் பிரதி
பின்வரும் ஆவணங்களின் பிரதிகள்:

1. ............................................................................
2. ............................................................................